ஊடக அறிக்கை
தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
+94 11 2477424 / +94 11 2477423 +94 11 2346257
communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

| | |
|---|---|
| வெளியிடுபவர் | ஊழியர் சேமலாப நிதியத் திணைக்களம் |
| திகதி | 2021.05.21 |

# பயணத்தடைகள் காரணமாக இலங்கை மத்திய வங்கியின் ஊழியர் சேமலாப நிதியத் திணைக்களமானது தொலைதூர மற்றும் பிரதேசப் பணிகளை வழங்குகிறது

நாட்டினுள் அமுலாக்கப்பட்டுள்ள பயணத்தடைகளின் காரணமாக இலங்கை மத்திய வங்கியின் கொழும்பில் அமைந்துள்ள தலைமை அலுவலகம் மற்றும் பிரதேச அலுவலகங்களுக்கு சமூகமளிக்காது ஊழியர் சேமலாப நிதியத் திணைக்களத்தினால் வழங்கப்படும் பணிகளை தபாலில், மின்னஞ்சலில், இணையத்தில் அல்லது உரிமம்பெற்ற வர்த்தக வங்கிக் கிளையொன்றின் ஊடாகப் பெற்றுக்கொள்வதற்கு வசதிகள் வழங்கப்பட்டுள்ளது.

1. **சீ படிவங்களினூடாக ஊழியர் சேமலாப நிதியப் பங்களிப்புக் கொடுப்பனவுகளைச் செலுத்துவதற்கு**

   சீ படிவத்தில் அச்சிடப்பட்டுள்ள தொடர்பு இலக்கத்தினைக் குறிப்பிடுவதன் மூலமாக ஊழியர் சேமலாப நிதியக் கொடுப்பனவுகளுக்கு கிடைக்கக்கூடியவாறு நாடு முழுவதிலுமுள்ள எந்தவொரு மக்கள் வங்கிக்கிளை கருமபீடத்திலும் காசோலையை/ வைப்புச்சீட்டினைப் பூர்த்திசெய்து மாதாந்த பங்களிப்பினைச் செலுத்தவும். கொடுப்பனவின் பின்னர் சீ படிவத்தை கருமபீடத்தில் சமர்ப்பிக்கவும்.

   சீ படிவத்திலுள்ள தொடர்பு இலக்கம் உங்களுக்கு உரித்துடையதில்லையாயின், உங்களுடைய தொடர்பு இலக்கத்தை அறிந்துக்கொள்ள கீழேயுள்ள இலக்கங்களுக்கு அழைக்கவும்.
   011-2206637, 011-2206638, 011-2206639, 011-2206659, 011-2206661

2. **இலத்திரனியல் மூலமாக வங்கிக் கிளையொன்றினூடாக ஊழியர் சேமலாப நிதியப் பங்களிப்புக் கொடுப்பனவுகளைச் செலுத்துவதற்கு**
   கொமர்ஷல் வங்கி, சம்பத் வங்கி, ஹட்டன் நெஷனல் வங்கி, இலங்கை வங்கி, மக்கள் வங்கி, செலான் வங்கி, தேசிய அபிவிருத்தி வங்கி (NDB), ரீஎப்சீசீ வங்கி (DFCC) ஆகிய வங்கிகளின் எந்தவொருக் கிளையிலும் ஒன்லைன் அல்லது நேரடிப் பற்றின் (டிரெக்ட் டெபிட்) ஊடாக ஊழியரின் பங்களிப்புத் தகவலை வழங்கவும், ஊழியர் சேமலாப நிதியப் பங்களிப்புகளின் கொடுப்பனவைச் செலுத்தவும் முடியும். பதிவு செய்வதற்கும் மேலதிகத் தகவலைப் பெற்றுக்கொள்வதற்கும் கீழேயுள்ள இலக்கங்களுக்கு அழைக்கவும்.
   011-2477475, 011-2477927, 011-2477971, 011-2477981, 011-2477987, 011-2477990, 011-2477999

3. **சாதாரணத் தபாலில் ஊழியர் சேமலாப நிதியின் நிலுவை உறுதிப்படுத்தல்களைப் பெற்றுக்கொள்வதற்கு**
   தேசிய அடையாள அட்டை மற்றும் “பீ” அட்டையின் பிரதிகளுடன் அங்கத்தவரின் கையொப்பமிடப்பட்ட கோரிக்கைக் கடிதமொன்றினை இவ்அறிவித்தலின் கீழே குறிப்பிடப்பட்டுள்ள விலாசத்திற்கு அனுப்பவும்.
   பதில் அஞ்சல் அனுப்பப்பட்டவுடன் குறுந்தகவல் (SMS) அனுப்ப வேண்டிய தொலைபேசி இலக்கத்தைக் குறிப்பிடவும்.

4. **மின்னஞ்சல் மூலமாக நிலுவை உறுதிப்படுத்தல்களை பெற்றுக்கொள்வதற்கு**
   தேசிய அடையாள அட்டை மற்றும் “பீ” அட்டையின் ஸ்கேன் செய்யப்பட்ட ஆவணங்களுடன் கோரிக்கைக் கடிதமொன்றை epfhelpdesk@cbsl.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும்.

5. **அங்கத்தவரின் கணக்கில் குறிப்பிடப்பட்டுள்ள பெயரை அல்லது தேசிய அடையாள அட்டை இலக்கத்தைத் திருத்துவதற்கு**
   தற்போது பணிபுரியும் இடத்தில் அங்கத்தவரின் விபரங்களைத் திருத்துவதற்கு, தொழில்தருநரால் சான்றுபடுத்தப்பட்ட சரியான தேசிய அடையாள அட்டை, “பீ” அட்டை மற்றும் பிறப்புச் சான்றிதழின் பிரதிகளுடன் பணிபுரியும் இடத்துடன் தொடர்புடைய முகவரி அச்சிடப்பட்ட நிறுவனக் கடிதத்தாளில் அச்சிடப்பட்ட கோரிக்கைக் கடிதமொன்றை இவ்அறிவித்தலின் கீழே குறிப்பிடப்பட்டுள்ள விலாசத்திற்கு அனுப்பவும்.
   திருமணம், தேசிய அடையாள அட்டை புதுப்பிப்பு அல்லது பிறப்புச் சான்றிதழில் பெயர் மாற்றம் போன்றவற்றின் விளைவாக பெயர் மாற்றமடைந்திருப்பின், பொருத்தமான ஆவணங்களின் சான்றுபடுத்தப்பட்ட பிரதிகளை அனுப்பவும்.

6. **வெளிநாட்டு பயணத்திற்காக வீசா விண்ணப்பங்களை வழங்கும் நோக்கத்திற்காக ஊழியர் சேமலாப நிதியின் நிலுவை உறுதிப்படுத்தல்/ பங்களிப்பு வரலாற்று அறிக்கையை கோருவதற்கு**
   தேசிய அடையாள அட்டை, “பீ” அட்டை, செல்லுபடியாகும் கடவுச்சீட்டு மற்றும் வீசா விண்ணப்பப் படிவத்தின் சுயவிபரப்பக்கம் ஆகியவற்றின் ஸ்கேன் செய்யப்பட்ட ஆவணங்களுடன் கோரிக்கைக் கடிதமொன்றை உங்களது தனிப்பட்ட மின்னஞ்சல் முகவரியிலிருந்து epfonlinebalance@cbsl.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும்.

நிலவும் நோய்த்தொற்றின் காரணமாக, மத்திய வங்கியின் ஊழியர் சேமலாப நிதியத் திணைக்களத்திற்கும் பிரதேச அலுவலகங்களுக்கும் சமூகமளிப்பதை கட்டாயமாக கட்டுப்படுத்துமாறு கோரப்பட்டுள்ளது. மேலே குறிப்பிடப்பட்ட விடயங்கள் அல்லது இலங்கை மத்திய வங்கியின் ஊழியர் சேமலாப நிதியத் திணைக்களத்தினால் வழங்கப்படும் ஏனைய பணிகள் தொடர்பில் விசாரிப்பதற்கு அலுவலக நாட்களில் மு.ப 7.45 தொடக்கம் பி.ப 4.00 மணிவரை பொதுமக்கள் தொடர்புகள் மற்றும் விசாரணைகள் பிரிவின் கீழே தரப்பட்டுள்ள இலக்கங்களைத் தொடர்புக்கொள்ளவும்.

| | |
|---|---|
| தொலைபேசி இலக்கங்கள் | : 011-2206642, 011-2206690, 011-2206691, 011-2206692, 011-2206693, 0702252051, 0701278502, 0702247862 |
| தொலைநகல் | : 011-2206694 |
| மின்னஞ்சல் முகவரி | : epfhelpdesk@cbsl.lk |

மேலேயுள்ள விடயங்கள் தொடர்பில் மேலதிக விபரங்களை ஊழியர் சேமலாப நிதியத் திணைக்களத்தின் www.epf.lk என்ற இணையத்தளத்தினூடாகப் பெற்றுக்கொள்ளலாம்.

கண்காணிப்பாளர்
ஊழியர் சேமலாப நிதியத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
தளம் 12, கோபுரம் 5
இல. 30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01